***DEPOSITION OF WITNESS***

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

-----

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.***

| | | |
|---|---|---|
| *Case Number* | : | CC-246/2022 |
| *Prosecution Witness* | : | அ.சா. 1 |
| *Name* | : | எல்.குமார் |
| *Father's/Husband Name:* | : | லோகநாதன் |
| *Address :* | : | வேலூர் |
| *Age* | : | 60 /2024 |

<u>தேதி: 12/03/2024</u>

**முதல் விசாரணை :** <u>சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.S.ஜான்சிராணி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது</u> ( **எதிரிகள் ஆஜர்** )

நான் தற்போது பாரஸ்ட் ரேஞ்சர் ஆக பெரம்பலூர் மாவட்ட வேப்பந்தட்டை வனசரக அலுவலகத்தில் பணியாற்றி வருகிறேன். தற்போது ஊதியமில்லா மருத்துவ விடுப்பில் உள்ளேன். கடந்த 16/06/2019 அன்று இரவு 12.30 மணிக்கு எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி, நானும் வேப்பந்தட்டை வனவர் எஸ்.குமார், கைகளத்தூர் பீட் வனக்காப்பாளர்

பாலசுப்பிரமணியம், செம்மலை பீட் வனகாப்பாளரர் எம்.குணசேகரன் ஆகியோர் குழுவாக டார்ச் விளக்குகளுடன் எங்களது சொந்த இருசக்கர வாகனத்தில் புறப்பட தயாரான போது அரும்பாவூர் காவல் நிலைய ஆய்வாளர் அவர்களை தொடர்பு கொண்டு மான் வேட்டைக்கு அரும்பாவூர் ஏரியில் ஆட்கள் வந்திருப்பதாக கிடைத்த தகவலைக் கூறினேன். அவர் அரும்பாவூர் காவல் நிலையத்திற்கு வரும்படி எங்களை அழைத்தார். அதனால் நாங்கள் அங்கு 1.00 மணிக்கு சென்றோம். நாங்கள் காவல் ஆய்வாளரிடம் விபரத்தை நேரடியாக கூறினேன். எங்களுடன் காவல் ஆய்வாளர் கலா, உதவி ஆய்வாளர் சிலம்பரசன் முதல் நிலைக் காவலர் கலைச்செல்வன் ஆகிய மூவரும் அவர்களது அரசு வாகனத்தில் எங்களுடன் வந்தனர். நாங்கள் அனைவரும் அரும்பாவூர் பெரிய ஏரியின் தென் கரையின் பகுதிக்கு சென்று ஜீப் வாகனம் செல்லும் இடம் வரை சென்று வாகனத்தை நிறுத்தி தென்கரையில் ஒத்தையடி பாதையில் நடந்து சென்றோம்.

அங்கு TN-46S-2640 என்ற பதிவெண் கொண்ட ஒரு இரு சக்கர வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டது. அந்த வாகனம் வேட்டையாட வந்தவர்களின் வாகனமாக இருக்கலாம் என கருதி நாங்கள் அங்கேயே மறைந்து கண்காணித்தோம். பாலசுப்பிரமணியன் என்ற வனக்காப்பாளரை சற்று முன்னே சென்று அங்கு என்ன நடக்கிறது என கண்காணிக்கும் படி கூறினேன். நிலவு வெளிச்சத்தில் அங்கு சிலரின் பேச்சு சத்தம் கேட்டது. அப்போது ஒரு மான் ஏரியில் தண்ணீர் குடித்துவிட்டு தரையில் படுத்துள்ளது. மேலும், மானை ஒன்றும் செய்யவில்லை எனவும் அவர்கள் பேசிக்கொண்டிப்பதாகவும் எங்களிடம் சைகை மூலமாக காண்பித்தார். அதனால் சப்தம் வந்த இடத்தை நாங்கள் அனைவரும் தீவிரமாக கண்காணித்துக் கொண்டிருந்தோம். பெரிய ஏரியின் தென் கரையில் எங்களுக்கு வடக்கு பகுதியில் வெடி சத்தம் கேட்டது. அதை நாங்கள் கண்காணித்தோம். பாலசுப்பிரமணியன் எங்களிடம் மானை சுட்டு விட்டதாக

கூறினார். அதையும் நாங்கள் கண்காணிக்கும் படி கூறினோம். மான் சுடப்பட்டதால் தப்பி ஓடியுள்ளது. அதனால் அதை தடியால் அடித்துள்ளனர். பின்பு மான் இறந்துள்ளதால் அதை தூக்கிக் கொண்டு இருசக்கர வாகனம் இருக்கும் இடத்திற்கு வருகின்றனர் எனக் கூறி வனக்காப்பாளர் சைகை காண்பித்து மறைந்து கொண்டார். பின்பு அதேபோல் அவர்களும் மானை தூக்கிக் கொண்டு இருசக்கர வாகனத்திற்கு அருகில் வந்து இருசக்கர வாகனத்தில் ஏற்ற முற்பட்ட போது நாங்கள் அவர்களை சுற்றி வளைத்துக் கொண்டோம். அதில் அருண்பாண்டியனையும் சிலம்பரசன் என்பவர் ஆறுமுகம் என்பவரையும் பிடித்துக் கொண்டோம். மேலும் ஒருவர் தப்பி ஓடினார். அவரை பிடிப்பதற்கு எஸ்.குமார் மற்றும் குணசேகரன் என்ற எங்களது அலுவலர்களை அனுப்பினோம். அவர்கள் இருவரும் தப்பியவரை பிடிப்பதற்கு ஓடினார்கள். ஆனால் அவர் பிடிபடவில்லை. பிடிபட்ட நபர்களையும், மானையும் விசாரணை செய்தோம். மானிற்கு தலையில்

அடிபட்டு இரத்தம் வந்தது. மேலும் மானின் மார்பில் குண்டடி பட்டு இரத்தம் வந்தது. பிடிபட்டவர்களை விசாரணை செய்து சம்பவ இடத்திலேயே மகஜர் தயார் செய்தோம். விபரங்களை பதிவு செய்து எதிரிகளிடமும், சாட்சிகளிடமும் கையொப்பம் பெற்றோம். மேலும், H.நமுனா மற்றும் மகஜர் நமுனா ஆகியவற்றை எஸ்.குமார் தயார் செய்தார். மகஜர் நமுனாவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதன்பிறகு, சம்பவ இடத்திலேயே பாஸ்பரஸ் டப்பா, மற்றும் மான் ஆகியவற்றை கைப்பற்றினோம். பின்பு, முதல் மற்றும் இரண்டாம் எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 2.30 மற்றும் 2.45 மணிக்கு எஸ். குமார் என்ற வனவர் பதிவு செய்தார். அதில் நான் கையொப்பம் இட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். ஆஜர் எதிரிகளில் இரண்டு பேரை எனக்கு தெரியும். அதில் ஒருவரின் பெயர் அருண்பாண்டியன். மற்றொருவரின் பெயர் ஆறுமுகம். பின்பு கைது செய்த

எதிரிகளை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினோம். மேலும், மானின் உடலை போஸ்ட்மார்டம் செய்வதற்காக வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அந்த கடிதத்திலுள்ள கையொப்பமும் என்னுடையது தான்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

*Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.*

*Sd/-*

*Judicial Magistrate No.I,*

*Perambalur.*

JM-I, PBLR